Sree Sathyasayee High School, Ootacamund.

*82. Q.—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(a) whether it is a fact that the teachers serving in Sree Sathyasayee High School, Ootacamund, have not been paid their salaries for the past 12 months;

(b) if so, the reasons therefor; and

(c) the action proposed to be taken thereon?

உதகமண்டலம் ஸ்ரீ சத்தியசாயி உயர்நிலைப் பள்ளி.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) உதகமண்டலம் ஸ்ரீ சத்தியசாயி உயர்நிலைப் பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கடந்த 12 மாதங்களாக ஊதியம் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அதுகுறித்து மேற்கொள்ளக் கருதியுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பள்ளிக்கென ஏற்படுத்தப்பட வேண்டிய 'அறக்கட்டளை நிதியினை குறிப்பிட்ட தவணைகளுக்குள் பள்ளி நிர்வாகம் கட்டவில்லையாதலால் ஆசிரியர்களின் ஊதியத்திற்கான மானியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

(உ) பள்ளி நிர்வாகம் இதுவரை ரூ. 47,000-ஐ அறக்கட்டளை ஏற்படுத்தி இருக்கவேண்டும். இந்த நிபந்தனையை நிறைவேற்றிய பிறகுதான் ஆசிரியர்களின் ஊதியத்திற்கான மான்யம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. எஸ். கணபதி: துணைத் தலைவர் அவர்களே, அங்கீகாரம் கொடுத்த பிறகு, அது தற்காலிக அங்கீகாரமாக இருந்தாலும் சரி, அங்குள்ள ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுக்கின்ற பொறுப்பை 1964-ம் ஆண்டு முதற் கொண்டு அரசு எடுத்துக்கொண்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே அவர்களுக்கு ஏன் ஊதியம் வழங்கப்படவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பள்ளிக் கட்டடத்திற்கு ஏற்படுத்த வேண்டிய கட்டளை நிதியை ஏற்படுத்தவில்லை. அதற்குத் தவணை கேட்டார்கள். தவணை கொடுத்து 1974-க்குள் கட்ட வேண்டும் என்று சொன்னோம். அப்போதும் கட்டவில்லை. பிறகு 1975 க்குள் கட்ட வேண்டு மென்று சொன்னோம். கட்டவில்லை. மேலும் அவர்கள் வேறுபல நிபந்தனைகளைச் சரிவர நிறைவேற்றாததால், மானியம் கொடுப்பது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. செ. முத்துசாமி: தனியார் பள்ளி நிர்வாகத்தினருக்கு தற்காலிக அனுமதி வழங்கப்பட்ட பிறகு, ஒவ்வொரு நிபந்தனையின் அடிப்படையிலே அவர்கள் பணம் கட்டவில்லை என்பதற்காக மானியம் கொடுக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்படுவது மானேஜ்மெண்டார் அல்ல. ஆசிரியர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். 12 மாத காலமாக அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படவில்லை. அரசே ஆசிரியர்களுக்கு உடனடியாகச் சம்பளம் வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அதுபற்றித் தனியாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கலாம். தவிர நிபந்தனைகளில் ஐந்தாறு குறைபாடுகளை நிறைவேற்றாமல் இருக்கிறார்கள். அவற்றை நிறைவேற்ற வலியுறுத்தி வருகிறோம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: அந்தப் பள்ளியில் மானியப் பொறுப்புக் கட்டணம் கட்டக் கட்டத்தான் தற்காலிக அனுமதி கொடுக்கிறார்கள். எத்தனை வகுப்புவரை நடத்தப் பெறுகிறது? பாதிக்கப்பட்டிருப்பது எத்தனை வகுப்புகள்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: 11-வது வகுப்பு வரையிலே நடத்திக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அனுமதி பெறாமலேயே அதைத் துவக்கிவிட்டார்கள்.

The furniture and equipment provided are not adequate; the building in which the school is being held is not suitable and adequate for a High School; the continuance of the Headmaster beyond the age of superannuation, viz., 58 years without prior approval of the Director is irregular; the school does not have a qualified Headmaster during 1974–75; the Correspondent had not forwarded the recognition application for Standard XI in spite of repeated reminders; the Correspondent had shifted the School

to a new premises without obtaining the prior approval of the department; the higher Standards IX to XI do not have economic strength.

இவ்வளவு குறைபாடுகளுடன் பள்ளி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளியைப் பற்றிக் குறைபாடுகளை எல்லாம் சொன்னார்கள். இவ்வளவு குறைபாடுகள் இருக்கும்போது, கடந்த 12 மாத காலமாகவே நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தனியார் பள்ளி பாதுகாப்புச் சட்டத்தின்படி அவர்கள்மீது நடவடிக்கை எடுத்திருக்கலாம். ஏன் பள்ளிக் கல்வி இயக்குநர் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இயக்குநர் நடவடிக்கை எடுத்துக்கொள்ளாததுபற்றி விவரம் இல்லை. அந்தப் பள்ளியை அரசு ஏற்று நடத்துவதா, அல்லது கொஞ்ச காலம் பொறுத்து வசதியையும் வாய்ப்பையும் ஆராய்ந்து திரும்ப அவர்களிடமே ஒப்படைத்துவிடுவதா என்று தனியாக ஆராய வேண்டும்.

திரு. பி. ஆர். தாமஸ்: அந்தப் பள்ளியில் இறுதி ஆண்டுத் தேர்வு எழுத மாணவர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்களா? அப்படியானால் அங்கு பணியாற்றும் ஆசிரியர்களுக்கு நேரிடையாக ஊதியம் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது நேரடியாக வழங்கும் நிலை ஏற்படவில்லை. அதுபற்றித் தனியாக ஆராய வேண்டும்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்: அந்தப் பள்ளியில் 11-வது வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு அவர்கள் அனுமதி பெறாத நிலையிலே, 11-வது வகுப்பு மாணவர்கள் தேர்வு எழுதுவதை அனுமதிப்பதுபற்றிய நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி ஒரு சூழ்நிலை ஏற்படுமானால், வேறு சில இடங்களில் பள்ளிகளுக்கு அனுமதி வழங்குவதுபோல், இதற்கும் அனுமதி வழங்கப்படும்.